DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**S.T.C.No. 1185/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | பழனி | Age | : | 32 |
| F/N | : | நாகநாதன் | Occupation | : | புரோட்டா மாஸ்டர் |
| Village | : | ஆண்டிதேவன் வலசை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 05th day of March 2025.

**05.03.2025**

**(எதிரி ஆஜர்). (சாட்சி குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எனது சொந்த ஊர் ஆண்டிதேவன் வலசை என்றாலும், எனது குடும்பம் அந்த ஊரில் தான் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார்கள் என்றாலும் சரிதான். அ.சா.2 எதிரியின் மகனை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.2க்கும், எதிரியின் மகனுக்கும் இடையே குடும்ப பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். அவர்கள் இருவரும் காவல்நிலையத்தில் அடிக்கடி புகார் கொடுத்துகொள்வார்கள் என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு எதிரே உள்ள நிலத்தை நான் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த இடத்தில் காம்பவுண்ட் சுவர் அமைத்து செடிகள் வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த இடத்தின் சாவி என் அக்காவிடம் கொடுத்து வைத்துள்ளேன். அந்த இடத்திற்கு அருகே வீடுகள் உள்ளன என்றால் சரிதான். நான் தினமும் அந்த இடத்திற்கு செல்லமாட்டேன். எனது அக்காவை அழைத்து கொண்டு எப்போதாவது செல்வேன். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே குடியிருக்கும் நபர்கள் எங்கள் இடத்தில் உள்ள மரங்கள் அவர்கள் வீட்டிற்குள் வருகிறது என்று என்னிடம் சொன்னார்கள் என்றால் சரியல்ல.

**2.** மேற்படி விவரத்தை மேற்படி நபர்கள் எனது அக்காவிடம் சொன்னார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி நல்ல சேகர் மற்றும் மற்றொரு நபருக்கு தெரியும். அவர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. அ.சா.2 கடந்த 9 வருடங்களாக அவரின் கணவருடன் வாழவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக நான் எனது அப்பா, அம்மா மற்றும் உறவினர்கள் எதிரியின் வீட்டிற்கு சென்று கதவை உடைத்தீர்கள் என்றாலும், அதற்கு எதிரி உச்சிப்புளி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றாலும்

சரியல்ல. பக்கத்து வீட்டுக்காரர்கள் யாரோ எனது செடிகளை வெட்டி விட்டார்கள் என்றாலும், குடும்ப பிரச்சனை காரணமாக எதிரி மீது இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சம்பவ தினத்தன்று மதியம் 1 மணிக்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகார்மனுவை உச்சிப்புளி போலீசார் மதியம் 03.00 மணிக்கு எழுதினார். சொன்ன நேரத்தில் நான் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அக்காவை வாழ வைக்கவேண்டும் என்பதற்காக எதிரி மீது புகார் கொடுத்து துன்புறுத்துகிறேன் என்றால் சரியல்ல. தற்போதும் அ.சா2 க்கும், அவரது கணவருக்கும் இடையே நீதிமன்றத்தில் வழக்கு நடந்துவருகிறது என்றால் சரிதான். தற்போதும் அவர்கள் இருவரும் பிரிந்து தான் வாழ்ந்து வருகிறார்கள். நான் சொன்னது போல் எதிரி என்னை அசிங்கமாக பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2025.03.05 13:52:23 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**